| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்<br>உதவி இயக்குநர்கள். |

**ந.க.எண். 234123 /F1/2018** **நாள் : 31.01.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் மார்ச் 2019 – தேர்வு மையங்களுக்கு முதன்மை விடைத்தாட்கள் வழங்குவதற்கான அறிவுரை வழங்குதல் – சார்பு.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி(அ.தே.1)த்துறை, நாள்.22.05.2017.
2. அரசாணை(1டி) எண். 556, பள்ளிக் கல்வி(ஜிஇ1)த் துறை, நாள்.21.09.2017.
3. அரசாணை (1டி) எண்.745, பள்ளிக் கல்வி(ஜிஇ1)த் துறை, நாள். 08.12.2017.

-----

நடைபெறவுள்ள மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள முதன்மை விடைத்தாட்களின் வகைகள் மற்றும் வரைகட்டத்தாள், வரைபடங்கள் ஆகியவற்றை முதன்மை விடைத்தாளுடன் வைத்து தைக்க வேண்டிய பக்கங்களின் விவரம் ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வறிவுரைகளைப் பின்பற்றி தேர்வு மையங்களுக்கு முதன்மை விடைத்தாட்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு:** மேற்குறிப்பிட்டவாறு

ஒம்/–
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
   – இவ்விவரத்தினை அனைத்து மேல்நிலை தேர்வு மையங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   – தகவலுக்காக வழங்கப்படுகிறது.
3. கண்காணிப்பாளர், 'K' பிரிவு (அலுவலகம்).

# <u>மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – மார்ச் 2019</u>

## <u>விடைத்தாட்கள் வழங்குதல் தொடர்பான அறிவுரைகள்</u>

மார்ச் 2018 தேர்வுக்கு அச்சடிக்கப்பட்ட அதிக பக்கங்கள் கொண்ட விடைத்தாட்களையும், மார்ச் 2019–க்கு அச்சடிக்கப்பட்ட குறைக்கப்பட்ட பக்கங்கள் கொண்ட விடைத்தாட்களையும் தேர்வு மையங்களுக்கு கலந்து வழங்குதல் கூடாது. ஒரு தேர்வு மையத்திற்கு பாட வாரியாக விடைத்தாட்களை வழங்கும்போது மார்ச் 2019 தேர்விற்கு புதிதாக அச்சடிக்கப்பட்ட விடைத்தாட்களையோ அல்லது கடந்த ஆண்டுகளில் பயன்படுத்தியதை போன்ற அதிக எண்ணிக்கையிலான பக்கங்கள் கொண்ட விடைத்தாட்களையோ (அதாவது ஒரே மாதிரியான எண்ணிக்கையிலான பக்கங்கள் கொண்ட விடைத்தாட்களையே) வழங்க வேண்டும்.

1. மொழிப்பாடங்களுக்கான (Language and English) முதன்மை விடைத்தாள் 30 பக்கங்கள் புள்ளியிடப்பட்ட / கோடிடப்பட்ட விடைத்தாளில் எழுதும் வகையில் கொடுக்கப்பட வேண்டும்.

மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு **HSE - FIRST YEAR LANGUAGE** என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளையும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு **HSE-LANGUAGE** என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளையும் தேர்வர்களுக்கு வழங்க வேண்டும்.

**தேர்வர்கள் மொழிப்பாடங்களுக்கு கூடுதல் விடைத்தாள் கோரினால் புள்ளியிடப்பட்ட / கோடிடப்பட்ட கூடுதல் விடைத்தாட்கள் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.**

2 உயிரியல் பாடத்தை பொறுத்தவரையில், உயிரி–தாவரவியல் மற்றும் உயிரி–விலங்கியல் என ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இரண்டு முதன்மை விடைத்தாட்கள் வழங்கப்படும் . ஆனால் ஒரே ஒரு Topsheet மட்டுமே வழங்கப்படும்.

மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு **HSE - FIRST YEAR BIO - BOTANY & HSE - FIRST YEAR BIO - ZOOLOGY** என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளையும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு **HSE - BIO - BOTANY & HSE - BIO - ZOOLOGY** என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளையும் தேர்வர்களுக்கு வழங்க வேண்டும்.

<u>முகப்புத்தாள் மற்றும் முதன்மை விடைத்தாட்கள் தைக்க வேண்டிய முறை</u>

1. முதலில் முகப்புத்தாள் வைக்கப்பட வேண்டும்.
2. அதன் கீழ் **HSE - FIRST YEAR BIO - BOTANY** அல்லது **HSE - BIO- BOTANY** முதன்மை விடைத்தாள் வைக்கப்பட வேண்டும்.
3. அதன் கீழ் Bio-Botany பாடத்திற்கென பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கோடிடப்படாத வகையிலான 4 பக்கங்கள் கொண்ட ஒரே ஒரு கூடுதல் விடைத்தாள் மட்டுமே வைக்கப்பட வேண்டும் `

4. அதன் கீழ் **HSE - FIRST YEAR BIO - ZOOLOGY** அல்லது **HSE - BIO - ZOOLOGY** முதன்மை விடைத்தாள் வைக்கப்பட வேண்டும்
**(குறிப்பு : 14 பக்கங்கள் கொண்ட முதன்மை விடைத்தாட்கள் பயன்படுத்தப்பட்டால், BIO BOTANY முதன்மை விடைத்தாளுக்கு பின்னர் ஒரு கூடுதல் விடைத்தாளை வைத்து தைக்க வேண்டும். 22 பக்கங்கள் கொண்ட முதன்மை விடைத்தாட்கள் பயன்படுத்தப்பட்டால், BIO BOTANY முதன்மை விடைத்தாளுக்கு பின்னர் ஒரு கூடுதல் விடைத்தாளை வைத்து தைக்க வேண்டியதில்லை)**

மேற்படி 4 பகுதிகளையும் ஒன்றாக தைத்து ஒரே விடைத்தாள் புத்தகமாக தேர்வர்களுக்கு வழங்க வேண்டும். **BIO-ZOOLOGY** பாடத்திற்கு தேர்வர்கள் கோரினால் கூடுதல் விடைத்தாட்கள் வழங்கலாம். அவ்வாறு பெற்று பயன்படுத்தப்படும் **BIO-ZOOLOGY** பாட கூடுதல் விடைத்தாளானது, மேற்படி விடைத்தாள் புத்தகத்தின் அடியில் வைத்து துளையிட்டு நூல் கொண்டு இணைத்து கட்டப்பட வேண்டும். இது குறித்து தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.

**3.** மேல்நிலைத் தேர்வில் கணக்குப் பதிவியல் (Accountancy) மற்றும் தொழிற்கல்வி கணக்குப்பதிவியல் (Vocational Accountancy +1 Old Syllabus only) பாடத்திற்கான விடைத்தாள் 1 முதல் 14 பக்கங்கள் கோடிடப்படாமலும், மீதமுள்ள பக்கங்கள் கோடிடப்பட்டும் இருக்கும்.
மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு **HSE - FIRST YEAR - ACCOUNTANCY** என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளையும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு **HSE - ACCOUNTANCY** என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளையும் தேர்வர்களுக்கு வழங்க வேண்டும்.
**மேலும், மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கான தேர்வுகளுக்கு பிரத்யோகமாக கணக்கீடுகள் செய்வதற்கு ஏதுவான கட்டங்கள் இடப்பட்ட கூடுதல் விடைத்தாட்கள் வழங்கப்பட வேண்டும்.**

**4.** மேல்நிலைத்தேர்வில் இதர பாடங்களுக்கு (கணினி அறிவியல் பாடம் உட்பட) **30** பக்கங்கள் அடங்கிய முதன்மை விடைத்தாட்களை பயன்படுத்த வேண்டும்.
மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு **HSE - FIRST YEAR MAIN** என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளையும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு **HSE** என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளையும் தேர்வர்களுக்கு வழங்க வேண்டும்.
**பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்களுக்கு) மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் தேர்வு மையங்களுக்கு மட்டும் கணினி அறிவியல் பாடத் தேர்விற்கு OMR Sheet வழங்க வேண்டும்.**

**5.** **மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் புதிய பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு வரலாறு பாடத் தேர்வுக்கு முதன்மை விடைத்தாளுடன் ஒரு பண்டைய கால இந்திய வரைபடத்தினை கடைசி தாளுக்கு முன்னர் வைத்து தைத்து வழங்கப்படவேண்டும்.**

6. **மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு வரலாறு பாடத் தேர்வுக்கு முதன்மை விடைத்தாளுடன் ஒரு இந்திய ஆறுகள் வரைபடம் மற்றும் ஒரு தென்னிந்திய ஆறுகள் வரைபடத்தினை கடைசி தாளுக்கு முன்னர் வைத்து தைத்து வழங்கப்படவேண்டும்.**

மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வில் வரலாறு பாடத் தேர்வுக்கு முதன்மை விடைத்தாளுடன் கடைசி தாளுக்கு முன்னர் ஒரு இந்திய வரைபடத்தினையும், புவியியல் பாடத் தேர்வுக்கு முதன்மை விடைத்தாளுடன் ஒரு உலக வரைபடத்தினையும் கடைசி தாளுக்கு முன்னர் வைத்து தைத்து வழங்கப்படவேண்டும்.

7. மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கு, வணிக கணிதப்பாடத்திற்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாளுடன் <u>(Business Mathematics)</u> ஒரு வரைகட்டத்தாளினை (Graph Sheet) விடைத்தாளின் கடைசி தாளுக்கு முன்னர் வைத்து தைத்து வழங்கப்பட வேண்டும்.

8. **மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் புதிய பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு புள்ளியியல் பாடத் தேர்வுக்கு முதன்மை விடைத்தாளுடன் ஒரு வரைகட்டத்தாளினை (Graph Sheet) கடைசி தாளுக்கு முன்னர் வைத்து தைத்து வழங்கப்படவேண்டும்.**

9. **மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு புள்ளியியல் பாடத் தேர்வுக்கு முதன்மை விடைத்தாளுடன் இரு வரைகட்டத்தாட்களை (Graph Sheet) கடைசி தாளுக்கு முன்னர் வைத்து தைத்து வழங்கப்படவேண்டும்.**

ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் சிறப்பு உறைகளை பொறுத்தமட்டில் 20 விடைத்தாட்களுக்கு ஒரு சிறப்பு உறை என்ற வீதத்தில் கணக்கிட்டு வழங்கப்படவேண்டும். பாடத்திட்ட வாரியாகவும், மொழிப்பாடங்களுக்கு மொழிவாரியாகவும் சிறப்பு உறைகள் பயன்படுத்தவேண்டும். பிற பாடங்களுக்கு பயிற்றுமொழிவாரியாக தனித்தனி உறைகள் பயன்படுத்தப்படவேண்டும்.

10. <u>கூடுதல் விடைத்தாட்கள் குறித்த அறிவுரை:–</u>
கோடிட்ட / புள்ளியிட்ட முதன்மை விடைத்தாட்கள் பயன்படுத்தப்படும் தேர்வுகளுக்கு கோடிட்ட / புள்ளியிட்ட கூடுதல் விடைத்தாட்களையும், கோடிடப்படாத முதன்மை விடைத்தாட்கள் பயன்படுத்தப்படும் தேர்வுகளுக்கு கோடிடப்படாத கூடுதல் விடைத்தாட்களையும் பயன்படுத்த வேண்டும். மேலும் கணக்குப்பதிவியல் தேர்விற்கு பிரத்யேகமாக கணக்கீடுகள் செய்வதற்கு ஏதுவான கட்டங்கள் இடப்பட்ட கூடுதல் விடைத்தாட்கள் வழங்கப்பட வேண்டும்.

11. <u>முகப்புத் தாட்கள் தைக்கும் முறை:</u>
மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு மற்றும் இடைநிலைத் தேர்வு எழுதும் ஒவ்வொரு தேர்வருக்கும் அன்னார் தேர்வெழுதும் பாடம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான புகைப்படம் உள்ள இதர விவரங்கள் அடங்கிய முகப்புச்சீட்டு (Top Sheet) வழங்கப்பட்டுள்ளது. அம்முகப்புச்சீட்டை (Top Sheet) தையல் இயந்திரத்தின் உதவியுடன் 16–ம் எண் ஊசியைப் பயன்படுத்தி வெள்ளை நிற 3ply நூல் (cotton) கொண்டு “6SPI” (Stitches Per Inch) என்ற அளவில் தைக்கப்பட வேண்டும்.

**விடைத்தாள் வகை வாரியான பக்கங்கள் (+1 / +2 ) எண்ணிக்கை விவரப் பட்டியல்**

| SCRIPT CATEGORY | NO. OF PAGES | | TYPE |
|---|---|---|---|
| | +1 | +2 | |
| HSE-LANGUAGE | 30 | 30 | RULED / DOTTED |
| HSE-BIO BOTANY | 14 / 22 | 14 / 22 | UNRULED |
| Addl.Sheet (Unruled) | 04 | 04 | UNRULED |
| HSE- BIO ZOOLOGY *Stitched together | 14 / 22 | 14 / 22 | UNRULED |
| HSE- ACCOUNTANCY | 30 | 30 / 46 | 1-14 UNRULED, 15-30 Account Sheets } +1<br>1-14 UNRULED, 15-30 / 15-46 Account Sheets } +2 |
| HSE (OTHERS) | 30 | 30/38 | UNRULED |

ஒம்/–
**இயக்குநர்**